2014 ஆகஸ்ட் 8]
381—

சொந்தக் கட்டடம்

***4466—திரு. எல். வெங்கடேசன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருக்கோவிலூர் தொகுதி, சித்திலிங்கமடம் மற்றும் கண்டாச்சிபுரம் ஆகிய பகுதிகளிலுள்ள துணை வேளாண்மை விரிவாக்க மையங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் தொகுதியில், சித்திலிங்கமடம் மற்றும் கண்டாச்சிபுரம் ஆகிய இரு இடங்களிலும் துணை வேளாண்மை விரிவாக்க மையம் அமைக்க கிராமப் பஞ்சாயத்து அல்லது வருவாய்த் துறை மூலமாக இலவசமாக இடம் வழங்கும்பட்சத்தில் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள்.*

முற்பகல் 10-55

திரு. எல். வெங்கடேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்கள் அல்லது தரிசு நிலங்களைத் துறை ஆய்வு செய்து அங்கே சொந்தக் கட்டடங்களைக் கட்டுவதற்கு அரசு முன்வர வேண்டும். அதேபோன்று ஒரு துணை வேளாண் விரிவாக்க மையத்திலே சுமார் 30, 35 கிராமங்களிலே இருக்கின்ற விவசாயிகள் அங்கு சென்று வேளாண் இடுபொருட்களை வாங்கிப் பயனடைகின்றார்கள். அப்படி இருக்கின்ற அந்தத் துணை மையம், இப்போது சுமார் 100 முதல் 150 சதுர அடியில் மட்டும்தான் இயங்கி வருகிறது. அங்கே விவசாயிகள் வந்து வாகனத்தை*

நிறுத்திவிட்டு தங்களுடைய இடுபொருட்களை ஏற்றிச் செல்வதற்கான இட வசதி கிடையாது. அதுமட்டுமல்ல, அந்தக் கட்டடங்களும் பழுதடைந்த நிலையில் உள்ளன. எனவே பெரும்பான்மையான விவசாயிகளின் எதிர்பார்ப்பு என்னவென்றால், இந்த இரு மையங்களிலும் சுமார் 30 டன் விதைப்பொருட்களை இருப்பு வைக்க வேண்டும், அதேபோன்று நுண்ணுரம் போன்றவற்றை சுமார் 40 டன் அளவில் இருப்பு வைக்க வேண்டிய காரணத்தினால், சுமார் 2,000 சதுர அடி பரப்பளவில் அரசு சொந்தக் கட்டடங்களை துணை வேளாண் விரிவாக்க மையத்திற்குக் கட்டித் தர வேண்டும் என்ற அந்த விவசாயிகளுடைய எதிர்பார்ப்பைச் செயல்படுத்திட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டத்திற்குப் புதிய கிடங்குகள் மற்றும் பழைய கிடங்குகளின் பராமரிப்பிற்காக, கடந்த ஆண்டு 1 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில், புதிய கட்டடம் உடனடியாக கட்டுவதற்கு, சொந்த இட வசதி இருந்த அரசு விதைப் பண்ணை, இருவேல்பட்டில் சுமார் 25 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் விதை இருப்புக் கிடங்கும், 25 இலட்சம் ரூபாய் ஒதுக்கீட்டில் விதை சுத்திகரிப்பு நிலையமும், அரசு விதைப் பண்ணையும், வானூரில் 25 இலட்சம் ரூபாயில் விதை சுத்திகரிப்பு நிலையமும், சங்கராபுரம் வட்டாரத்தில் 25 இலட்சம் ரூபாய் செலவில் விதை இருப்புக் கிடங்கும் கட்டிக் கொடுக்கப்பட்டது.

விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூரிலிருந்து 12 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சித்தலிங்கமடம் மற்றும் 16 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கண்டாச்சிபுரம் ஆகிய இரு இடங்களில் துறையின் மூலமாக ஆய்வு செய்யப்பட்டபோது, உரிய இடம் இல்லை என்ற காரணத்தினால், கடந்த ஆண்டு பழைய கட்டடங்கள் பராமரிப்பு செய்யவோ, புதிய கட்டடங்கள் கட்டவோ ஆவன செய்ய முடியவில்லை.

2014 ஆகஸ்ட் 8]

தமிழகத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் 380 மையங்களில் பிரதான வேளாண் விரிவாக்க மையங்கள் சொந்தக் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. மேலும், 500 இடங்களில் துணை வேளாண் விரிவாக்க மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதில் 375 துணை வேளாண் விரிவாக்க மையங்கள் சொந்தக் கட்டடங்களிலும், மீதமுள்ள 125 துணை விரிவாக்க மையங்கள் வாடகைக் கட்டடங்களிலும் இயங்கி வருகின்றன. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தில் வாடகைக் கட்டடங்களில் செயல்பட்டுக்கொண்டிருக்கின்ற வேளாண்மைத் துறை அலுவலகங்கள் அனைத்தையும் படிப் படியாக சொந்தக் கட்டடங்களுக்கு மாற்ற நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின்படி, சித்தலிங்கமடம், கண்டாச்சிபுரம் ஆகிய பகுதிகளில் விவசாயிகளுடைய நலன் கருதி நடப்பாண்டில் NADP Part-II Scheme மூலமாக மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, துறை ரீதியாக ஆய்வு செய்யப்பட்டபின், மீண்டும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியைப் பெற்று, மேற்கண்ட இடங்களில் புதிய கட்டடங்களைக் கட்டித் தர மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள்.

திரு. எல். வெங்கடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கோவிலூர் வட்டாரத்தில், மாடாம்பூண்டியில் அமைந்திருக்கின்ற துணை வேளாண் விரிவாக்க மையம் அரசுக்குச் சொந்தமான கட்டடத்தில்தான் இயங்கி வருகிறது. ஆனால் கடந்த ஒரு வருட காலமாக அந்தக் கட்டடம் பழுதுபட்டு, அங்கே எந்தவிதமான இடுபொருட்களும் கொடுப்பதில்லை. திருக்கோவிலூரில் இருக்கின்ற வேளாண் விரிவாக்க மையத்திற்கு வந்து இடுபொருட்களை விவசாயிகள் வாங்கிச் செல்கின்றார்கள். ஆதலால், அந்தக் கட்டடத்தைப் பழுது பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, டெல்டா பாசன விவசாயிகளுக்கு சம்பா, குறுவை 'kit' கொடுக்கப்படுகின்றது. எங்களுடைய விழுப்புரம் மாவட்டம் முழுக்க முழுக்க விவசாயத்தை நம்பியிருக்கின்ற மாவட்டம். அதேபோன்ற எதிர்பார்ப்பு அவர்களிடத்திலும் இருக்கின்றது. ஏனென்றால், அருகில் இருக்கின்ற கடலூர் மாவட்ட விவசாயிகளுக்குக்கூட சம்பா, குறுவை 'kit' கொடுக்கப்படுகிறது. அதேபோன்று, விழுப்புரம் மாவட்ட விவசாயிகளுக்கும் கொடுக்கப்படுமா எனத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டத்தில் இருக்கின்ற 21 பிரதான வேளாண் விரிவாக்க மையங்கள் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. 27 இடங்களில் இருக்கின்ற துணை வேளாண்மை விரிவாக்க மையங்களில், 19 சொந்தக் கட்டடங்களிலும், 8 வாடகைக் கட்டடங்களிலும் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. இதிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட மாடாம்பூண்டி பகுதியில் இருக்கின்ற துணை வேளாண் விரிவாக்க மையங்களை நடப்பு ஆண்டிலே பழுது பார்க்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு மாமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின்படி தமிழகத்தில் இருக்கின்ற அனைத்துத் தகுதியுள்ள விவசாயிகளுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, அரசின் சார்பில் இடுபொருட்களை மானிய விலையில் வழங்கி வருகின்றது என்பதை மாண்புமிகு மாமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

வினா வரிசை எண் 382, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.